எம்சி.எண்.4/2022 நாள்: 11.07.2023

ம.சா.1 பிரியா

<u>**மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்குவிசாரணை:**</u>

1. நான் எதிர்மனுதாரருடன் காதல் திருமணம் செய்து கொண்டேன் என்றால் சரிதான். எனது குழந்தைகளான 2 மற்றும் 3 மனுதாரர்கள் அரசு பள்ளியில் தான் படிக்கிறார்கள் என்றால் சரிதான். எனது குழந்தைகளை படிக்க வைப்பதற்கான கல்வி கட்டணத்தை ஆவணமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்யவில்லை. எதிர்மனுதாரர் எந்த நிறுவனத்தில் சூப்பர்வைசராக பணிபுரிந்து வருகிறார் என்று மனு மற்றும் நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன் வசந்தம் காட்டன் மில்லில் வேலை பார்த்ததாக சொல்லியுள்ளேன். எதிர்மனுதாரர் மாதம் ரூபாய் 1 லட்சம் சம்பாதித்து வருவதாக ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை. ஆனால் 1லட்சம் சம்பாதிக்கிறார்.

2. என்னுடைய மனுவில் எதிர்மனுதாரருக்கு கோயம்பத்தூரில் சொந்த வீடு உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன் ஆனால் அதற்கான ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் தாக்கல் செய்யவில்லை ஆனால் எனது வீட்டில் வைத்துள்ளேன். எதிர்மனுதாரர் அன்றாடம் சித்தாள் வேலைக்கு சென்று வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. கட்டிட வேலை செய்யும் ஆட்களுக்கு சூப்பர்வைசராக வேலை பார்த்து வருகிறார். எதிர்மனுதாரர் கோவை மாவட்ட மாண்புமிகு சார்பு நீதிமன்றத்தில் எச்எம்ஓபி எண்.223/2022 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும் அதில் நான் ஆஜராகாமல் ஒரு தலைபட்சமாக உத்தரவு பிறப்பிக்கபட்டுள்ளது என்று சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் நான் தற்போது வசிக்கும் மாடக்கோட்டை கிராமத்திற்கு 4 முறை வந்தார் என்று சொன்னால் ஒரு முறை தான் வந்தார்.

3. எதிர்மனுதாரர் வட்டிக்கு பணம் கொடுத்து மாதம் ரூபாய் 2 லட்சம் சம்பாதித்து வருவதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரிதான். எதிர்மனுதாரர் தொடர்ந்து என்னை வாழ அழைத்து வருகிறார் என்றும் நான் தான் சேர்ந்து வாழ மறுக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் மனுவில் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மைக்கு

புறம்பான சங்கதிகள் என்றும் நான் தான் பொய்யான தகவல்களை மனுவில் கூறி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. அன்றாடம் தினக் கூலி வேலை செய்பவர் என்பதாலும் என்னுடன் எதிர்மனுதாரர் சேர்ந்து வாழ தயாராக உள்ளார் என்றும் அதனால் எதிர்மனுதாரர் ஜுவானம்சம் நான் பெறுவதற்கு எனக்கு உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**S/d.R.M.மாரிமுத்து, பி.ஏ.பி.எல்.,**
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.